யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 07
## First Term Examination – 2020 – Grade 07

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |

சுட்டெண் Index No

## தமிழ் மொழியும் இலக்கியமும்

பகுதி - I

**மிகப் பெருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. “களங்கமிலாவுளத்தான்” களங்கம் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்
    1. தெளிவு 2. செம்மை 3. குற்றம் 4. கடுப்பு

02. தாலம் போற்ற வாழ வேண்டும். தாலம் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்
    1. வானம் 2. உலகம் 3. மேகம் 4. திங்கள்

03. பரீட்சை வினாத்தாள்கள் இரகசியமாக பாதுகாக்கப்பட்டன. இங்கு இரகசியம் என்பதன் எதிர்ப்பதம்
    1. நேர்த்தி 2. உண்மை 3. பரகசியம் 4. தரம்

04. உழவன் வயலை உழுது பண்படுத்தினான். இங்கு உழவன் என்பதன் எதிர்பாற் சொல்
    1. உழவை 2. உழத்தி 3. உழவி 4. உழத்தினி

05. பின்வருவனவற்றுள் தெலுங்கு மொழிச் சொல்லாக அமைவது
    1. கடுதாசி 2. துட்டு 3. அலுமாரி 4. மேசை

06. குதிரை கனைக்கும் என்பது போல் எருது
    1. கத்தும் 2. கதறும் 3. பிளிறும் 4. முக்காரம் இடும்

07. ஐம்பதாவது ஆண்டில் முடிவில் எடுக்கப்படும் விழா
    1. வெள்ளிவழா 2. பொன்விழா 3. வைரவிழா 4. பவளவிழா

08. குளம் வற்றி வரண்டு காணபவ்பட்டது. இங்கு வற்றி வரண்டு என்பது
    1. இணைமொழி 2. அடுக்குமொழி
    3. இரட்டைத் தொடர் 4. அடுக்கிடுக்குத் தொடர்

09. “வாடும் பயிருக்கு வான்மழை போல” என்றந உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்
    1. தெட்டத் தெளிவு 2. நன்மைக்கு இடையூறு
    3. துன்பத்தில் அபாயம் 4. பயனற்ற மழை

10. தமிழ் மொழியிலுள்ள முதல் எழுத்துக்கள் எத்தனை
    1. 216 2. 18 3. 30 4. 12



kalvi.lk

11. ''அறம் செயவிரும்பு'' என்பதில் வந்துள்ள எழுவாய்
   1. அறம் 2. விரும்பு 3. நீ 4. செய

12. சின்னத்தம்பி பெரிய பந்தை மெதுவாக அடித்தான். இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள செயற்படுபொருள்
   1. தம்பி 2. பெரிய 3. பந்து 4. அடித்தான்

13. மெமறி(Memory) என்பதற்கான தமிழ் வடிவம்
   1. இணையம் 2. பல்லூடகம் 3. நினைவகம் 4. மின்னஞ்சல்

14. வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதனால் மக்கள்
   1. பாதிப்படைவர் 2. பாதிப்படைந்தனர் 3. பாதிப்படைவர் 4. பாதிப்பர்

15. ஓடியது என்ற வினைச்சொல் உணர்த்துவது.
   1. நிகழ்காலம் 2. எதிர்காலம் 3. இறந்தகாலம் 4. முக்காலம்

16. பின்வருவனவற்றுள் எதிர்மறை வினை கொண்ட வாக்கியம்
   1. மழை பெய்யாது
   2. தம்பி விளையாடினான்
   3. சூரியனக் உதித்தது
   4. நண்பன் வருவான்

17. ''ஒருவரின் தகுதி கண்டு உதவு'' என்ற பொருள் தரும் பழமொழி
   1. மனமுண்டானால் இடமுண்டு
   2. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
   3. பாத்திரமறிந்து பிச்சை பொடு
   4. பழகப் பழக பாலும் புளிக்கும்

18. குமார் காலையில் கண் விழித்தான் இங்கு காலை என்பது
   1. பொருட்பெயர் 2. இடப்பெயர் 3. சினைப்பெயர் 4. காலப் பெயர்

19. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவியாக அமைவது
   1. ஓடு ஓடு 2. பேரும் புகழும் 3. தக தக 4. பாடிப் பாடி

20. ''யாம் ஐவேம்'' என்ற பாடலைப் எழுதியவர்
   1. கவிஞர் அழகசுந்தர தேசிகர்
   2. முத்து இராதா கிருஸ்ணன்
   3. மௌனகுரு
   4. இன்குலாப்

(20x2=40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II
### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01. பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தொரிவு செய்து நூற்றைம்பது(150) சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.
    1. சுத்தம் பேணி சுகமாய் வாழ்வோம்
    2. வாசிப்பின் மகத்துவம்
    3. பாழடைந்த வீட்டின் சுயசரிதை
    4. நீர் விரும்பும் பெரியார்

(20 புள்ளிகள்)

02. பாடசாலையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற உமது நண்பனைப் பாராட்டி எழுபத்தைந்து (75) சொற்களுக்கு குறையாமல் கடிதம் எழுதுக?

(10 புள்ளிகள்)

03. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக
    1. களிப்பு
    2. பணிவு
    3. சீரும் சிறப்பும்
    4. சத்தியம்
    4. மட மட

(10 புள்ளிகள்)

04. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
    1. அந்தரேயின் தாயினது குணப்பண்புகளை எழுதுக?
    2. சாடி வரல் என்பதன் கருத்து யாது?
    3. ஆறு சென்று வந்த மூன்று இடங்களைக் குறிப்பிடுக?
    4. மனிதனுக்குள்ள தலையாய கடமை என்ன?
    5. நான்கு வகையான பயன்களும் எவை?
    6. "காலாழ்களர்" என்பதன் கருத்து யாது?
    7. மரத்தின் பயன்பாடுகள் எவை?
    8. கவிஞர் அழகு சுந்தர தேசிகர் எழுதிய நூல்கள் எவை?
    9. சிறைச்சாலையில் காந்தியடிகளுக்கு செய்து கொடுக்கபடபட்ட வசதிகள் எவை?
    10. முத்தையா அவர்கள் கண்டுபிடித்த தட்டச்சை ஆரம்பத்தில் எவ்வாறு அழைத்தார்கள்?

(10x2=20 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457